# நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர முறைமை (TNSWS) திட்டம்

## வெற்றிட அறிவிப்பு – தகவல் தொழில்நுட்ப சிறப்பு – I பதவி

நாட்டு எல்லைகள் ஊடாக இடம்பெறும் வர்த்தக செயற்பாடுகளில் (ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் மீள் கப்பல் ஏற்றுமதி) ஈடுபடும் வர்த்தகர்களினால் முன்வைப்பதற்கு தேவையான அனைத்து ஆவணங்களையும் ஒற்றை சாளரம் வழியாக சமர்ப்பிப்பதற்கு மற்றும் அந்த தளம் ஊடாகவே தானியக்க முறையில் முடிவுகளையும் பெற்றுக்கொடுப்பதற்கு முடியுமாகும் வகையில் அனைத்து ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் மற்றும் முகவர் நிறுவனங்களுடன் நெருக்கமான அடிப்படையில் இணைக்கப்பட்ட தளம் ஒன்றுக்கு கொண்டுவந்து சர்வதேச வர்த்தக போக்குவரத்துக்கு வசதிகளை ஏற்படுத்துவதற்காக தேசிய முன்னுரிமை திட்டம் ஒன்றாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர முறைமையை செயற்படுத்துவதற்கும் அந்தப் பணிக்கான திட்டத்தை செயற்படுத்தும் பிரிவு ஒன்றை (PIU) நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, இலங்கையின் ஒற்றைச் சாளர முறைமை திட்டத்தின் திட்டத்தை செயற்படுத்தும் பிரிவின் **தகவல் தொழில்நுட்ப சிறப்பு – I பதவிக்காக** தகுதியை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன.

### தகைமைகள்

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு நிறுவனத்தில் இருந்தும் பெறப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் அல்லது மென்பொருள் பொறியியல் அல்லது தொடர்புடைய துறையில் இளமாணி பட்டம்;

  **அல்லது**

  தொடர்புடைய துறையில் பட்டப்படிப்புக்கு இணையான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை ஒன்று;
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு நிறுவனத்தில் இருந்தும் பெறப்பட்ட தொடர்புடைய துறையில் முதுமாணி பட்டம் விரும்பத்தக்கது;

  **மற்றும்**
- பாரிய அளவிலான ICT முறைமைகளுக்கு தொடர்புடைய குறைந்தது 09 ஆண்டுகள் அனுபவம், அதில் முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 4 ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

### பொதுவான நிபந்தனைகள்

- 2025.09.21 ஆம் திகதிக்கு 55 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.
- வருடாந்த செயல்திறன் மதிப்பீடு அடிப்படையில் வருடாந்த ஒப்பந்தத்தை நீடிப்பதற்கு உட்பட்டு, 23 மாத காலத்திற்காக விண்ணப்பதாரர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள்.
- 2025.09.21 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் தேவையான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.
- வெற்றிடத்தை நிரப்புவது அல்லது நிரப்பாமல் இருக்கும் உரிமை நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வசமானது.
- இங்கு குறிப்பிடப்பட்டாத அல்லது ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் எழுகின்ற ஏதேனும் சிக்கல் தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் முடிவு இறுதியான மற்றும் முடிவான முடிவாகும்.
- இந்த நியமனங்கள் 2019 மார்ச் 05 திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருப இலக்கம் 01/2019 இல் குறிப்பிடப்பட்ட சம்பள அளவு PS 2 இன் கீழ் மேற்கொள்ளப்படும்.
- சம்பளம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி இணக்கம் ஒன்றுக்கு வர முடியும் என்பதோடு சம்பள அளவு PS 2 இற்கான மற்ற கொடுப்பனவுகள் மற்றும் நன்மைகள் 2019 மார்ச் 05 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருப இலக்கம் 01/2019 இல் குறிப்பிடப்பட்டவாறு வழங்கப்படும்.

### விண்ணப்ப நடைமுறை

கல்வி/ தொழில் தகைமைகள் தொடர்பிலான சான்றிதழ்கள், சேவை அனுபவம், மற்றும் விண்ணப்பத்தில் உறுதி செய்யப்பட்ட பிரதிகள் மற்றும் உறவினர் அல்லாத தம்மைப் பற்றிய விபரங்களை பெற முடியுமான இருவரை தொடர்பு கொள்ள முடியுமான தொலைபேசி இலக்கங்களுடன் விரிவான சுயவிபரக்கோவை ஒன்றை, தகுதியை பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களினால் 2025.10.04 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் ஊடாக கீழுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

**முகவரி:**

**பணிப்பாளர் நாயகம்**
**வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களம்,**
**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,**
**செயலகம்,**
**கொழும்பு - 01.**

### ஆட்சேர்ப்பு முறை

குறுகிய பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு முழுமை பெறாத சுயவிபரக்கோவை மற்றும் குறித்த ஆவணங்களையும் முழுமை பெறாத வகையில் சமர்ப்பிப்பது தகைமை இழப்புக்கு காரணமாகும்.

வேலை விபரங்களும் உள்ளடங்கலாக மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து https://www.treasury.gov.lk/web/ministry-of-finance-vacancies என்ற இணையதள முகவரிக்கு பிரவேசிக்கவும்.

**செயலாளர்**
**நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு**
**செயலகம்,**
**கொழும்பு - 01.**

**திகதி: 2025.09.21**